**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**
**Crl.M.P.No.338/2026**

இம்ரான்(எ)இம்ரான்கான்,
த/பெ. முகமது ஹனீபா,
மணிவிளான் 7 வது தெரு,
அறந்தாங்கி டவுன் & தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ....... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

1. காவல் உதவி ஆய்வாளர்,
அறந்தாங்கி காவல் நிலையம்,
அறந்தாங்கி.
குற்ற எண்.457/2025.

2. சுதர்ஷன்,
த/பெ. வேல்முருகன்,
ராமலிங்கபுரம்,
குணரமாநல்லூர்,
தென்காசி மாவட்டம். ......எதிர்மனுதாரர்கள்/குற்றமுறையீட்டாளர்கள்

இம்மனுவானது இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் C.கோகிலா, B.A., LLB., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II ஆஜராகியும் இரு தரப்பு மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் .......

**உத்தரவு**

இம்மனுவானது U/s 497&503–இன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவில் உள்ள பொருண்மைகளின் சுருக்கம் :**

மனுதாரரின் மனுவில், மனுதாரர் தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் ஆவேன் என்றும், மனு சொத்தான TN 20 AW 8528 என்ற பதிவெண் கொண்ட LOADKING SUPER LWB PICKUP BS II வாகனம் மேற்படி குற்ற வழக்கு சம்பவத்தில் ஈடுப்பட்டதாக கூறி, அறந்தாங்கி காவல் நிலையத்தாரால் கைப்பற்றப்பட்டு அறந்தாங்கி காவல் நிலைய குற்ற எண்.457/2025, U/s.303(2) BNS r/w 21(1), 21(2) of MMDR Act இன் கீழான வழக்கில் பதிவுசெய்யப்பட்டு காவல் நிலையத்தில் இருந்து வருகிறது என்றும், வழக்கு சொத்தான வாகனத்தின் ஆவணங்கள் அனைத்தும் 2-ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளதால், அவரை 2-ம் எதிர்மனுதாரராக சேர்த்துள்ளேன் என்றும், மேற்படி தனக்கு சொந்தமான வழக்கு சொத்து தொழில் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது என்றும், மேற்படி வழக்கு சொத்து காவல்நிலையத்தில் சரியான பராமரிப்பில்லாமலும், மழையிலும், வெயிலிலும் இருந்து வருவதால் உபயோகமற்ற நிலைக்கு உள்ளாகி வாகனம் முற்றிலும் பழுதாகி பயனற்றதாகிவிடும் என்பதால், சமூகம் கோட்டார் அவர்கள் மேற்படி வழக்கு சொத்தான TN 20 AW 8528 என்ற பதிவெண் கொண்ட LOADKING SUPER LWB PICKUP BS II வாகனத்தை காவல்துறையினர் நீதிமன்றம் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டியும், ஒப்படைத்த பின்னர் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடவேண்டியும், இம்மனுவானது மனுதாரரால் BNS பிரிவு 497 &503-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணை:**

1-ம் எதிர்மனுதாரரான காவல் துறையினர் தரப்பில், மனுச்சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பிற்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வழங்கப்பட்டும், 2-ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரரிடம் வாகனத்தை ஒப்படைப்பது குறித்து எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

**3) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய வினா யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதாகும்.**

**4) தீர்வு:**

4.1) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4.2) 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுச்சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தினை தன் பெயருக்கு பெயர்மாற்றம் செய்யவில்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பிற்கு இந்நீதிமன்றத்தில் இருந்து நோட்டீஸ் அனுப்பப்பட்டு அது சார்வு செய்யப்பட்டதற்கான Postal Tracking Consignment–ன் இணையதள நகலினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் இருந்து, 2–ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அறிவிப்பினை பெற்று கொண்டு, 2–ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எவ்வித மறுப்புரையும் தெரிவிக்கவில்லை. மேலும், மனு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் மீண்டும் அவரது வாகனத்தை குற்ற செயலில் ஈடுபடுத்தக்கூடும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் கீழ்கண்ட வழக்கில் இயற்கை வளங்களுக்கு எதிராக செய்யபடும் குற்றங்களையும், ஆறுகளில் இருந்து மணல் எடுக்கப்படுவது குறித்தும் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*In the case of **intellectuals forum/Vs/ State of A.P. 2006 3SC 549** Apex court while balancing the conservation of natural resources vis-a-vis. Urban development observed as under.*

> ***"The natural resources of the earth. Including the air, water, land, flora and fauna and especially representative samples of natural ecosystems, must be safeguarded for the benefit of present and future generations through careful planning or mangement, as appropriate. Thus, there is no doubt about the fact that there is responsibility bestowed upon the Government to protect and preserve the tanks, which are an important part of the environment of the area. Public at large is a beneficiary of the seashore running water as forest and ecologically fragile lands.***
>
> ***Remove sand from rivers for related infrastructure in some location continue this likely to lead unsustainable situation and destruction of the main natural. The said resources being a gift of nature they should be made freely available to everyone irrespective of the status in life. Steps want to taken from lower level to save nature."***

மேற்கண்ட தீர்ப்பின்படி இயற்கை வளங்களுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும். எனவே, மனுதாரர் வாகனத்தை மனுதாரரிடம் உடனடியாக கொடுத்தால் அவர் மீண்டும் குற்றச்செயலுக்கு பயன்படுத்தக்கூடும் என்பதாலும், எதிர்கால சங்கதியினருக்கு தற்கால சங்கதியினர் சரியான முறையில் இயற்கை வளங்களை ஒப்படைத்து செல்லவேண்டும் என்ற அடிப்படையில் இயற்கை சுற்றுச்சூழல் நலன் கருதியும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.11 04:52:35 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**